**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**TIRUVANNAMALAI.**

**OS No.236/2023**

**02.01.2026 வா.சா.1 வசந்தா (எ) ஆயிஷா க/பெ. சர்தார்கான்**

**சத்திய பிரமாணத்தின் பேரில் 3,4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 3,4 பிரதிவாதிகளான வட்டாட்சியர் மற்றும் இணை சார் பதிவாளர் திருவண்ணாமலை ஆகியோரிடம் இவ்வழக்கில் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி சட்ட ரீதியாக அவருக்கு வழங்கப்பட்ட பணி மற்றும் அதிகாரத்தின் அடிப்படையில் வழக்கில் சம்மந்தப்பட்ட ஆவணங்களை பதிவு செய்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதியான வட்டாட்சியர் ஆவணங்களின் அடிப்படையில் பட்டா மாற்றம் செய்து உத்தரவிட்டார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 3,4 பிரதிவாதிகள் இவ்வழக்கில் அவசிய தரப்பினர்கள் இல்லை என்றும் அவர்களை அலைக்கழிப்பதற்காக இவ்வழக்கில் தேவை இல்லாமல் சேர்த்ததால் அவர்களை பொறுத்தவரை வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.